**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-11012026-11255

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 23.05.2026

Accepted: 25.06.2026

Published: 01.07.2026

Citation:
Pakutharivu, M., & Chandrasekaran, A. (2026). The Life of the Marginalized (Bottom-Rung) People in the Works of Perumal Murugan. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 62–68.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11255

*Corresponding Author:
chandhru2011@gmail.com.

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Life of the Marginalized (Bottom-Rung) People in the Works of Perumal Murugan

**M. Pakutharivu**
*Full-Time Ph.D. Research Scholar, Department of Tamil*
*Vivekanandha College of Arts and Sciences for Women (Autonomous)*
*Elayampalayam, Tiruchengode, Namakkal*
*Affiliated to: Periyar University, Salem*

**A. Chandrasekaran**
*Assistant Professor, Department of Tamil*
*Vivekanandha College of Arts and Sciences for Women (Autonomous)*
*Elayampalayam, Tiruchengode, Namakkal, Affiliated to: Periyar University, Salem*
*https://orcid.org/0000-0001-9446-9851*

**Abstract**

The novels of Perumal Murugan bring out, in fine detail, the caste dominance and untouchability-related problems of the regional society of Tiruchengode. The economic and social hardships of the marginalized people are portrayed in depth. This article records the way of life of the Kongu region and its social discriminations.

**Keywords:** Untouchability, Marginalized People, Social Problems, Economic Condition, Dominant Mindset, Rural Life, Social Reform.

**References**

1. A. Dhakshanamurthy, Tamilar Nagarigamum Panpadum (Tamil Civilization and Culture), Aindhinai Padhippagam, 2019.
2. Ma. Ramalingam, Vidudhalaikku Mun Pudhiya Tamil Chirukathaigal (New Tamil Short Stories Before Independence), Muthamizh Pasarai, Tiruchirapalli, 2001.
3. Na. Velammal, Tamil Novelgalil Porulaathaara Chinthanaigal (Economic Thoughts in Tamil Novels), New Century Book House, Chennai, 2008.
4. Perumal Murugan, Koolamadhari, Kalachuvadu Padhippagam, Chennai, 2015.
5. Perumal Murugan, Eruveyil, Kalachuvadu Padhippagam, Chennai, 2013.

# பெருமாள் முருகன் படைப்புகளில் அடித்தட்டு மக்களின் வாழ்வியல்

***மா. பகுத்தறிவு***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
இணைவு: பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

***ஆ. சந்திரசேகரன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
இணைவு: பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

***ஆய்வுச் சுருக்கம்***

*பெருமாள் முருகனின் நாவல்கள் திருச்செங்கோடு வட்டாரச் சமூகத்தில் நிலவும் சாதி ஆதிக்கம் மற்றும் தீண்டாமைச் சிக்கல்களை நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றன. அடித்தட்டு மக்களின் பொருளாதார, சமூக அவலங்கள் ஆழமாகச் சித்தரிக்கப்படுகின்றன. இக்கட்டுரை கொங்கு வட்டார வாழ்க்கை முறையையும் சமூகப் பாகுபாடுகளையும் பதிவு செய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தீண்டாமை, அடித்தட்டு மக்கள், சமூகச் சிக்கல்கள், பொருளாதார நிலை, ஆதிக்க மனப்பான்மை, கிராமப்புற வாழ்க்கை, சமூகச் சீர்திருத்தம், பெருமாள் முருகன், நாவல்.*

## முன்னுரை

சமகாலத் தமிழ் இலக்கியத்தில் சமூகப் பிரச்சினைகளைநேரடியாகவெளிப்படுத்தும் எழுத்தாளர்களில் பெருமாள் முருகன் முக்கியமானவர் குறிப்பாகத் திருச்செங்கோடு மற்றும் கொங்கு வட்டார சமூக வாழ்க்கையில் நிலவும் சாதிய வேறுபாடுகள், தீண்டாமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்ற பிரச்சினைகள் அவரது நாவல்களில் நுணுக்கமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அடித்தட்டு மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும், மேல்தட்டு மக்களின் ஆதிக்க மனப்பான்மையையும் வெளிப்படுத்துவதன் மூலம் சமூக மாற்றத்திற்கான சிந்தனையை எழுப்புவதே அவரது படைப்புகளின் முக்கிய நோக்கமாகும்.

திருச்செங்கோடு பகுதி கொங்கு வட்டாரத்தைச் சார்ந்ததாகும். இவ்வட்டாரத்தில் இராசிபுரம், ஈரோடு, நாமக்கல் போன்ற ஊர்கள் அடங்குகின்றன. இப்பகுதியில் பேசப்படும் வட்டார மொழி, பெருமாள் முருகனின் படைப்புகளில் இயல்பாக இடம்பெறுகிறது. கொங்கு வட்டாரத்தில் நிலவும் சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளும், அடித்தட்டு மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் பிரச்சினைகளும் அவரது படைப்புகளில் ஆழ்ந்த பார்வையுடன் சித்தரிக்கப்பட்டுள்ளன.

## சாதி அமைப்பின் தோற்றம்

மக்கள் சமுதாயம் உருவான காலத்திலிருந்தே சாதிப் பிரிவினையும்

தீண்டாமையும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படும் சங்க காலத்தில் சாதி சார்ந்த வேறுபாடுகள் நிலவியதை இலக்கியங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அ.தட்சணாமூர்த்தி, அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெரும் பிரிவினர் சமூகத்தில் மேல்தளத்தில் இருந்துள்ளனர். இவர்களைத் தவிரச் சமூகத்தில் நல்வாழ்விற்கு உதவும் தொழில்களைச் செய்த பல்வேறு தொழில் பிரிவினர் இருந்துள்ளனர். குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும் முல்லை நிலத்தவர் ஆயர் என்றும் மருத நிலத்தவர் உழவர் என்றும் நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும் பெயர் பெற்றனர். பாலை நிலத்தில் எயினர் என்பார் வாழ்ந்துள்ளனர். தச்சர், கொல்லர், குயவர், வண்ணார், நெசவாளர், உமணர், பறையர், பாணர், துடியர், கடம்பர், வேட்டுவர், கணியர், பரத்தையர் முதலான பல வகுப்பார் வாழ்ந்துள்ளனர். (அ.தட்சணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.43). பண்டைய சமுதாயத்தில் தொழில்களின் அடிப்படையில் சாதித் வேறுபாடுகள் நிலவியதை அறிய முடிகின்றது. தொன்மையான தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியமும் வருணப் பாகுபாட்டைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இதனை இலக்கியங்களிலும் தெளிவாகக் காண முடிகிறது. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியோர் சமூகத்தின் உயர்ந்த நிலைகளில் இருந்தனர். பிற சமூகத்தினர் அவர்களைச் சார்ந்த வாழ்க்கை முறையிலேயே வாழ்ந்தனர்.

## இலக்கியங்களில் சாதி

காலம் தோறும் நிலைத்து வந்த சாதிப் பிரிவினைகளை நீக்கி, மக்களைச் சரியான வாழ்க்கை முறைக்குத் திசைதிருப்பும் நோக்கில் எழுத்தாளர்கள் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைத் தொடர்ந்து முன்வைத்துள்ளனர். அந்த வகையில், சிறுகதை மற்றும் நாவல் எழுத்தாளர்களும் சமூகத்தில் ஆழமாகப் பதிந்திருந்த அவலங்களை அகற்றும் எண்ணத்துடன் பல படைப்புகளை உருவாக்கியுள்ளனர். குறிப்பாக, உயர் சாதியினரின் தீண்டாமைக் கொடுமைகளால் பாதிக்கப்படும் மக்களின் குரலாகப் படைப்பாளர்கள் தங்களது படைப்புகளை வடிவமைத்துள்ளனர்.

மா.ராமலிங்கம், சமுதாயத் தீமைகளை அகற்றிப் புதிய சமுதாயம் காணவிழைந்த தமிழ் எழுத்தாளர்கள் அதற்கேற்ற படைக் கருவியாகச் சிறுகதைகளைப் பயன்படுத்தினர். குறிப்பாகச் சாதிப் பாகுபாட்டின் கொடுமையைத் தமிழ் எழுத்தாளர்கள் சித்தரித்துக் காட்டினர் அவ்வகையில் புதுமைப்பித்தனின் புதிய நந்தன், அண்ணாதுரையின் குமரிக்கோட்டம், கி.வா.ஜ வின் சாதித் தடை முதலிய கதைகளைக் குறிப்பிடலாம். (மா.ராமலிங்கம், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப.73), தமிழ் எழுத்தாளர்கள் சமூகச் சீர்திருத்த நோக்கத்துடன் சாதி அடிப்படையிலான கொடுமைகளை வெளிப்படுத்தியிருப்பதை மா.ராமலிங்கம் விளக்கியுள்ளார்.

## கிராமப்புற சாதி ஆதிக்கம்

நகரங்களை ஒப்பிடும்போது, சாதிப் பாகுபாடுகள் கிராமப்புறங்களில் அதிகமாக வேரூன்றியிருந்தமை குறித்து ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

> **கிராமப்புறங்களில் மிக அழுத்தமான ஆதிக்கம் செலுத்தும் சாதிக் கட்டுப்பாடுகள் நகர்ப்புற வாழ்க்கைச் சூழலில் மதிப்பிழந்து போயின. வெவ்வேறு சாதியினர் கலந்து வாழும் நகரங்களில் காதல் திருமணங்களுக்கான சாத்தியக்கூறுகளும் அதிகம் மரபுகளில் ஊறிய புதிய தலைமுறையினருக்கும் காதல் பணம் ஒரு சிக்கல் ஆயிற்று. (நா.வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிந்தனைகள், ப.248 - 249)**

வேலம்மாளின் கருத்து கிராமப்புறங்களில் சாதிப் பாகுபாட்டின் தாக்கம் தீவிரமாக இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. கல்வி பரவலின் மூலம் சாதி ஆதிக்கம் ஓரளவு குறைந்தபோதிலும், சாதிச் சிந்தனைகள் மக்களின் மனங்களில் ஆழமாக பதிந்திருந்தன என்பதை தமிழ் இலக்கியப் படைப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

செல்வ வளமும் சமூக அரசியல் செல்வாக்கும் பெற்றுச் சிறுபான்மை மக்களைக் கொண்டது மேல் வர்க்கம். வறுமையும், கடுமையான உழைப்பும், பிறரை அண்டிப்பிழைக்கும் வாழ்க்கையும் பெற்றது கீழ் வர்க்கம். நடுத்தர வர்க்கத்திற்கும் கீழ் வர்க்கத்திற்கும் நடுவில் வரவுக்கும் செலவுக்கும் சமூக பதிப்புகளுக்கும் இடையில் தொடர் போராட்டம் நிகழ்த்தும் கீழ்வர்க்கம் என இப்புதிய வர்க்கப் படிநிலைமுறை பிரமிட் அமைப்பினைக்கொண்டது. (நா.வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிந்தனைகள், ப.249)

இது, சமூகத்தில் நிலவும் வர்க்க வேறுபாடுகளையும், பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுக்கிடையில் கீழ்த்தட்டு மக்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான போராட்டங்களையும் விளக்குகிறது. மேல் வர்க்கத்தினருக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் இடையில் வாழும் சிறுபான்மையினர், தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும், சாதிப் பாகுபாட்டால் ஏற்படும் இன்னல்களிலிருந்து தப்பிக்கவும் கடுமையாகப் போராட வேண்டிய சூழலில் உள்ளனர். இத்தகைய சமூக நிலைகளைப் பெருமாள்முருகன் தனது நாவல்களில் பதிவு செய்துள்ளார்.

**பெருமாள்முருகன் நாவல்களில் சாதி ஆதிக்கம்**

ஆதிக்க சாதியினரால் அடித்தட்டு மக்கள் தங்களது தேவைகளுக்காகப் பயன்படுத்தப் படுகின்றனர். காலம் கடந்தும் சாதி ஆதிக்க மனப்பான்மையோடு செயல்படுகின்றவர்கள், தங்களது சாதி மரபுகளை கடுமையாகக் கடைப்பிடிப்பதோடு, அடித்தட்டு மக்களை அடிமைத்தனமான அணுகுமுறையுடன் நடத்துகின்றனர். பொருளாதார வளமும் அதிகார பலமும் பெற்றிருப்பதன் காரணமாக, தாழ்த்தப்பட்ட மக்களைத்தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் கருவிகளாகவே பயன்படுத்துகின்றனர். தங்களது அனைத்து வேலைகளையும் அடித்தட்டு மக்களிடம் ஒப்படைக்கும் உயர்சாதியினர், அவர்கள் வாழும் பகுதிகளுக்குச் செல்வதையே தகாத செயலாகக் கருதும் மனப்போக்கு கொண்டவர்களாகப் பெருமாள்முருகனின் ஏறுவெயில், கூளமாதாரி போன்ற நாவல்களில் சித்தரிக்கப்படுகின்றனர்.

அடித்தட்டு மக்களை அடிமையாகவும் மரியாதை இன்றியும் நடத்தும் போக்கு, கருமாந்தரம்டா, சக்கிலியத்தேடி நாம வாரோமின்னு இருக்குது. (பெருமாள் முருகன், ஏறுவெயில், ப.68)

என்ன இருந்தாலும் ஒரு சக்கிலி எங்கள டா போட்டுக்கூப்பிடுறது ஒத்துக்கவே முடியாது (பெருமாள் முருகன், ஏறுவெயில், ப.181) அவன் என்னடான்னா அத்தை வீட்டுக்கு போனன்றான் நிய்யு இங்க இருந்தாங்கற என்னடா இது. அப்பனும் மகனும் ஆருதலையில மொளவாஅரைக்கப் பார்க்கிறீங்க சக்கிலிக்கு வர வர அன்னாப்புத்தாண்டா. (பெருமாள் முருகன், ஏறுவெயில், ப.69) எனும் பகுதிகள், நில உரிமையாளர்களாக விளங்கும் கவுண்டர் சமூகத்தினரின் சாதி ஆதிக்க மனப்பான்மையையும், அடக்கு முறைகளையும் வெளிப்படுத்துகின்றன. தங்களது தேவைகள் நிறைவேறும் நேரங்களில் மட்டும் அடித்தட்டு மக்களைப் பயன்படுத்திக் கொள்வதும், பிற சமயங்களில் அவர்களை இகழ்ச்சியுடன் நடத்துவதும், ஒருமையில் பேசி அவமதிப்பதும், தங்களைச் சார்ந்து வாழ்பவர்கள் என்ற மனநிலையுடன் அணுகுவதும் போன்ற செயல்கள் இவ்வகை சமூகப் போக்குகளை வெளிப்படுத்துகின்றன. கவுண்டர் இனத்தைச்

சேர்ந்த செல்வனுடன் கூளையன் திரைப்படத்துக்குச் சென்றபோது, ஒரு ஆட்டுக்குட்டி காணாமல் போகிறது. அதற்காக மன்னிப்பு கேட்கும் நோக்கில் அவன் கவுண்டரிடம் அழைத்துச் செல்லப்படுகிறான்.

என்னடா சக்கிலிங்கல்லாம் சேர்ந்துகிட்டு கச்ச கட்டலாம்ன்னு வந்திருக்கீங்களா... பட்டிக் காவல் ஆரோட பொறுப்பு... என் பையனா... அவன் பள்ளிக்கொடம் போயிக்கிட்டு இருக்கிறவன்.. அவனுக்கு என்ன மசுரா தெரியும். என்னமோ கொஞ்சம் தூரத்துல பட்டி போட்டிருக்கறமே... ராத்திரி வேளை ஆச்சேன்னு தொணைக்கு எம் பையன அனுப்புனா பட்டியைப் பத்தி என்ன தெரியும்... அவன் சொல்றான்னு இவன் போயிருக்கிறானே பிய்யத் தின்னடான்னு (பெருமாள் முருகன், கூளமாதாரி, ப.219) என்ற உரையாடல், கவுண்டரின் ஆதிக்க உணர்வையும், அவருள் ஆழமாகப் பதிந்துள்ள சாதி வெறியையும் வெளிப்படுத்துகிறது.

## பெண்கள் மற்றும் குழந்தைகள் நிலை

தங்களிடம் வேலை செய்யும் அடித்தட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டிய மனிதர்களாகக் கருதும் மனப்பான்மை இல்லாமல், பொருளாதார வளம் கொண்ட கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் தங்களை நம்பி வாழும் ஏழை மக்களிடம் இரக்கமின்றி நடந்துகொள்கின்றனர். பட்டிக்காவல் காக்கும் அடித்தட்டு இனத்தைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்குச் சாப்பாடு அளிப்பதற்குக் கூட மனமுவந்து செயற்படாமல், அவர்களை இகழ்ச்சியுடனும் கேலியுடனும் அணுகுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பண்ணையில் வேலை செய்யும் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் உணவு வழங்கும் சூழலில் கவுண்டச்சிகள் வெளிப்படுத்தும் ஆதிக்க மனப்பான்மையை கூளமாதாரி நாவல் புலப்படுத்துகிறது.

**இந்தப் பீத்த வவுத்துக்கு எத்தனை போட்டாலும் பத்தாது குடிச்சிபுட்டு இன்னும் சட்டிய நீட்டுவா"**

***(பெருமாள் முருகன், கூளமாதாரி, ப.28)***

ஆதிக்க சாதியைச் சேர்ந்த பெற்றோரின் வழிகாட்டுதலிலேயே வளர்ந்து வரும் குழந்தைகளும், தங்களது பண்ணைகளில் வேலை செய்யும் அடித்தட்டு மக்களிடம் ஆதிக்கம் செலுத்தும் மனப்போக்கைக் கொண்டவர்களாக உருவாகின்றனர். இளம் வயதிலேயே தாங்கள் உயர்சாதியினர் என்ற எண்ணம் வலுப்பெறுவதால், அடித்தட்டு சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்களையும் சிறுமிகளையும் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் நடந்துகொள்கின்றனர்.

கவுண்டரின் மகனான செல்வன், கூளையனைத் திரைப்படத்திற்குக் கூட்டிச் சென்றபோது ஆட்டுக்குட்டி காணாமல் போனதால், தந்தையிடம் தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தோடு சாதிய ஆதிக்க உணர்வும் வெளிப்படுகிறது.

அட மடத் தாயோலி எனக்குமல்லடா அடி விழுகும் (பெருமாள் முருகன், கூளமாதாரி, ப.188) என்ற அவனது பேச்சு, செல்வனின் மனத்தில் பதிந்திருக்கும் ஆதிக்கச் சாதி மனநிலையை வெளிப்படுத்துகிறது.

அடித்தட்டு மக்களின் வாழ்க்கைச் சூழல்களும் பொருளாதார நிலைகளும் தீண்டாமைக் கொடுமையால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

சமுதாயத்தில் ஒரு பிரிவினரைத் தீண்டத்தகாதவர் எனக் கருதி அவர்களை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்தும் கொடுமைப் படுத்துவதும் இந்துமதத்தின் பெரும் களங்கமாகவே இன்று வரை இருந்து வருகிறது. வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது தீண்டாமை என்பது ஆரியர்கள் இந்தியாவை வெற்றி கொண்டதன்விளைவு என்றும் அதன் காரணமாக ஏற்பட்ட சமுதாயக் கலப்பில் அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட ஒரு பகுதி மக்கள்

அவ்வினத்தோடு ஒன்று கலந்து அவர்களில் ஒரு பகுதியினர் மிகப் பிற்பட்ட இனத்தாராகித் தீண்டத்தகாதவர்களாக மாறினர் என்றும் ஏ.ஆர்.தேசாய் கருதுகின்றார். (மா.ராமலிங்கம், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப.70)

இது, தீண்டாமை என்பது சமூகத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் பெரும் அநீதியாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. தீண்டாமையின் காரணமாக அடித்தட்டு மக்கள் எண்ணற்ற துன்பங்களையும் அவமானங்களையும் அனுபவிக்க நேரிட்டது.

அந்நாட்களில் தீண்டத்தகாத தாழ்த்தப்பட்ட மக்கள் பல தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளாகினர். அவர்களுக்குப் பொதுவான கேணியில் தண்ணீர் எடுப்பதைக் கூட சாதி இந்துக்கள் தடை செய்தார்கள். அவர்களுக்குக் கல்வி உரிமை மறுக்கப் பட்டது. பஞ்சமர்கள் என்ற பெயரால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். ஊருக்குப் பொதுவான கோயிலில் நுழையவும் அவர்களுக்கு உரிமை இல்லாமல் இருந்தது (மா.ராமலிங்கம், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், ப.70) என மா. ராமலிங்கம் கூறுவது, தீண்டாமைக் கொடுமையால் மக்கள் அனுபவித்த சமூக மற்றும் மனிதாபிமான துயரங்களை வெளிப்படுத்துகிறது.

கொங்கு வட்டாரத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமைகளைப் பெருமாள்முருகன் நுட்பமான பார்வையுடன் ஏறுவெயில் நாவலில் பதிவு செய்துள்ளார். தீண்டாமையின் கொடுமையை,

இந்தா சூட்டோட ரெண்டு ஆரியத் தோசை தின்னு கருப்பட்டி போட்டுச் சுட்டு இருக்கிறேன். பாட்டி குப்பாயியின் கையில் ஒன்றையும் ராமாடிக்கு ஒன்றையும் நீட்டியது. அவள் முந்தானையை நீட்டி வாங்கிக்கொண்டாள் (பெருமாள் முருகன், ஏறுவெயில், ப.33)

பாட்டி ஆரியத்தை அளந்து போட்டது. ராமாயி சேலை முந்தானையை நீட்டி வாங்கிக்கொண்டாள். (பெருமாள் முருகன், ஏறுவெயில், ப.37)

இந்த நிகழ்வுகள், தங்களிடம் வேலை செய்யும் மக்களிடம் மேலாதிக்க உணர்வோடு நடந்து கொள்வதையும், தீண்டாமைச் சிந்தனைகள் அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாகப் பின்பற்றப்பட்டதையும் வெளிப்படுத்துகின்றன. தண்ணீரைக் கூட பாத்திரத்தில் நேரடியாகக் குடிக்க அனுமதிக்காமல், கைகளை இணைத்து வைத்துக் குடிக்கச் செய்வது போன்ற செயல்பாடுகளும் அக்காலச் சமூக நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

குப்பாடிக்கும் ராமாயிக்கும் பாட்டி தண்ணீர் ஊற்றியது. ஓலைக் கோட்டையைப் போல் கையை ஒட்டிக்கொண்டு குடித்தார்கள் (பெருமாள் முருகன், ஏறுவெயில், ப.35)

கூளமாதாரி நாவலிலும் கீழ்த்தட்டு சமூகத்தைச் சேர்ந்த சக்கிலிய மக்கள் தீண்டாமைக்குள்ளாகும் நிலை வெளிப்படையாகச் சித்தரிக்கப்படுகிறது.

பால் போசியின் பிடியில் முரட்டுத்துணி ஒன்று சுற்றிக் கட்டி இருக்கும். கைபடாமல் துணியைப் பற்றிப் போசியைக் கொண்டு போய்நாடார்வளவில் கொடுக்க வேண்டும். அங்கே ஐந்து ஆறு வீட்டுக்காரர்கள் பால் வாங்குவார்கள். போசியைத் திண்ணைமேல் வைத்துவிட்டு அவன் நிற்பான். போசியைத் திறந்து அவர்களே அளந்து ஊற்றிக் கொள்வார்கள். எல்லோரும் பாலை ஊற்றிக் கொண்டதும் பழையபடியே போசியைக் கொண்டுவந்து விடலாம். (பெருமாள் முருகன், கூளமாதாரி, ப.23) அடித்தட்டு மக்களால் கொண்டுவரப்படும் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியபோதும், அவர்களைத் தீண்டத்தகாதவர்களாகவே கருதும் மேல்தட்டு மக்களின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.

கூளமாதாரி நாவலில் பண்ணையில் வேலை செய்யும் செவிடி என்ற பெண்ணிடம், கவுண்டச்சி மறைவாக பாத்திரம் கழுவும்

வேலையை ஒப்படைக்கிறாள். அடித்தட்டு மக்கள் கவுண்டரின் வீட்டுப் பொருட்களைத் தொடக்கூடாது என்பதே அவர்களது விதிமுறையாகும். அப்படியே பாத்திரங்களைச் சுத்தம் செய்தாலும் அதை யாரிடமும் தெரிவிக்கக் கூடாது. கவுண்டர் வந்துவிட்டால் வேறு கதவு வழியாக ஓடிச் செல்ல வேண்டும் என்று கூறப்படுவது, தீண்டாமை மற்றும் அடிமைத்தனத்தின் உச்ச நிலையை வெளிப்படுத்துகிறது.

வீடு கூட்டுவதைக்கூட வெளியில் சொன்னால் பரவாயில்லை. பாத்திரம் கழுவுவதை எங்கும் செல்லக்கூடாது என்பது கவுண்டச்சி கட்டளை. கவுண்டருக்குக்கூடத் தெரியாது. செவிடி பாத்திரம் கழுவிக் கொண்டு இருக்கும்போது கவுண்டரோ வேறுயாரோ வந்து கதவைத் தட்டினால் எதிர்ப்பக்கக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போய்விட வேண்டும். (பெருமாள் முருகன், கூளமாதாரி, ப.54)

கூளமாதாரி நாவலில், கீழ்த்தட்டு சமூகத்தைச் சேர்ந்த மொண்டி என்ற நபரிடம் தெய்வீக சக்தி இருப்பதாக நம்பி பல சமூகத்தைச் சேர்ந்தவர்களும் மந்திரிக்க வருவது வழக்கமாகக் காணப்படுகிறது. அவர்கள் வேப்பிலைக் கொத்து கொண்டு வருவது மரபாக இருந்தது. கூட்டப் பள்ளியில் இருந்து வந்த கவுண்டச்சி, வேப்பிலை இல்லாமல் வருவதால், மொண்டி தனது துணியின் நுனியால் மந்திரம் செய்யத் தொடங்குகிறான். அப்போது துணி குழந்தையின் மீது பட்டதற்காக அவள் சினங்கொள்கிறாள்.

**கொழந்தை மேல வீசற. அப்பவே சொன்னாங்க கொஞ்சம் வேப்பந்தழ ஓடிச்சுக்கிட்டுப் போன்னு. நான்தான் சும்மா வந்துட்டேன்.**

***(பெருமாள் முருகன், கூளமாதாரி, ப.84)***

என்று அவள் கூறுவது, அவளது மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் தீண்டாமை உணர்வை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

சமூகம் என்பது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மக்களால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையான குடியிருப்பு வாழ்க்கைக்குத் திரும்பியபோது சமூக அமைப்பு உருவானது. மனிதனின் நிலையான வாழ்க்கை முறைக்கு விவசாயத் தொழில் முக்கிய காரணமாக இருந்தது. விவசாயத்தைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் தொடங்கிய மனிதன், சமூகக்கட்டமைப்பைஉருவாக்கினான். திருச்செங்கோடு வட்டாரத்தைச் சார்ந்த சமூகச் சிந்தனைகளைப் பெருமாள்முருகன் தனது நாவல்களில் பதிவு செய்துள்ளார்.

## துணைநூற் பட்டியல்

1. அ.தட்சணாமூர்த்தி,தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், 2019.
2. மா.ராமலிங்கம், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், முத்தமிழ்ப் பாசறை, திருச்சிராப்பள்ளி, 2001
3. நா.வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிந்தனைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008.
4. பெருமாள் முருகன், கூளமாதாரி, காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2015.
5. பெருமாள் முருகன், ஏறுவெயில், காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2013.